[26th March 1969

that over 6 million tonnes of grain are lost in India because of the rats and sparrows and whether, instead of giving subsidy, the Agriculture Department will itself undertake a pilot scheme in an area to find out the efficacy of removing rats by distributing rat poison ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : அறுவடை முடிந்த பிறகு பிப்ரவரி-மார்ச்சு மாதங்களில் வரப்புகளை வெட்டி, எலி வளைகளை வெட்டி எடுப்பதன் மூலம் அவைகள் அகற்றப்படுகின்றன. நெல்லைச் சாப்பிட்டு கொழுத்து நிறைய குஞ்சுகளை பொறித்து குடும்பத்தைப் பெருக்கியிருக்கிற நிலையில் அவைகளை அழிப்பதில் ஈடுபடவேண்டும். வெயில் காலத்தில் ஜூன் மாதங்களில் அவைகளை வளையிலிருந்து வெளியே வருவதற்கான ஃப்ளாஷ் லைட், அரிக்கேன் லைட் போட்டு வெளியில் கொண்டு வந்து அவற்றைக் கொல்லுகிறார்கள். அதற்கு மேலாக எலி பாஷாணத்தை உபயோகிக்கிறோம். மத்திய அரசிடம் இது பற்றிய திட்டம் கொடுத்திருக்கிறோம். அவர்கள் நமக்கு ஆதரவு கொடுத்தால் எலித் தொல்லைகளை அகற்ற முடியும். சைனுவிலிருந்து எலி எதுவும் கேட்கவில்லை. ஏதோ ஒரு மாநிலத்தில் கூட எலிக்கறி சாப்பிட லாமென்று சொல்லியதாகப் பத்திரிக்கையில் பார்த்திருக்கிறேன். அந்த மாநிலத்திலிருந்து கூட கோரிக்கை எதுவும் நமக்கு வரவில்லை.

திரு ஜி. சுவாமிநாதன் : தஞ்சையில் நடந்த விவசாயக் கருத்தரங்கில் எலிகளைக் கொல்லுவதற்காகக் கொடுக்கப்படும் 10 பைசா போதாது, அதிகமாகக் கொடுத்தால் ஏராளமான எலிகளைப் பிடிக்கலாம் என்று சொல்லப்பட்டது. எலிகளின் வால்களை வெட்டிக் கொண்டு வந்து காட்டினால் எத்தனை வால் என்று பார்த்து ஒவ்வொன்றுக்கும் 10 பைசா வீதம் கொடுக்கலாம் என்றும் பஞ்சாயத்து யூனியன் சார்பில் அதைக் கொடுக்கலாம் என்றும் முடிவு சொல்லப்பட்டது. ஆனால் இதில் உள்ள சிரமம் அரசாங்கத்துக்குத் தெரியுமா என்று தெரியவில்லை. வால்களைக் காட்டும்போது எந்த எலி முன்னால் பிடித்தது ; அதே எலி யின் வால்தானா அல்லது மறுபடியும் பிடித்த எலியின் வாலா என்று கண்டுபிடிக்கமுடியாது. அதனால் அதிகமான பணத்தைச் சிலர் சாப்பிடக்கூடிய நிலைமை உண்டாகும். இதை அரசு உணருமா ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : அரசாங்கத்திற்கு மிச்சமாகும் யோசனையைத்தான் சொல்லுகிறார்கள். வாலைக் கண்டுபிடிப்பதில் அது சுண்டெலியின் வாலா பெருச்சாளியின் வாலா என்று அறிவதற்கு ஒரு ஆபீசரைப் போட வேண்டிவரும். அந்த கஷ்டங்களையெல்லாம் பார்த்தால் எலி பாஷாணத்தையே உபயோகிப்பது சிறந்தது என்று தெரிகிறது.

திரு கே. எஸ். அப்துல் வகாப் : அதிகமாக எலிகள் உள்ள பிரதேசங் களில் பூனைகளை அதிகமாக வளர்க்க அரசாங்கம் திட்டம் வகுக்குமா ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : பூனைகள் அந்த அளவுக்குக் கிடைக்காது. நிலங்களுக்குப் பூனைகளை அனுப்பிவிட்டால் வீடுகளில் எலி களின் தொந்தரவு அதிகமாகிவிடும்.

MR. CHAIRMAN : It is said that the rat population is four or five times greater than the human population and there is a move in some countries to adopt family planning among the rats. (Laughter.)

Gang Mazdoors

* 226 *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Gang Mazdoors made a representation to the Government to make their job permanent ; and

(*b*) if so, the action taken thereon ?

கேங்க் மஸ்தூர்கள்

திரு வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கேங்க் மஸ்தூர்கள் தங்களின் வேலையை நிரந்தரமாக்க வேண்டுமென்று அரசிற்கு கோரிக்கைகள் தந்துள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அரசு அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) ஆம்.

(இ) பொதுப்பணித் துறை கேங்க் மஸ்தூர்கள் அடிக்கடி அரசினை வேண்டியதற்கிணங்க நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை கேங் மஸ்தூர்களின் பணிவிதி முறை முதலியன பரிசீலிக்க, அரசு ஒரு தனி அலுவலரை நியமித்தது. அவர் தம் அறிக்கையை நெடுஞ்சாலை கிராமப் பணித் தலைமைப் பொறியாளருக்குச் சமர்ப்பித்துள்ளார். தலைமைப் பொறியாளர் அவ் வறிக்கையின் மேல் தம் கருத்துரையும் வழங்கியுள்ளார். ஆயினும் சில குறிப்பிட்ட பரிந்துரைகள் மேல் அவருடைய கருத்துரை தெரிவிக்கவில்லை. அவற்றைத் தெரிவிக்கும்படி, மீண்டும் அவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

திரு வி. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்னால் தமிழ்நாடு (Gang Mazdoors) சங்கத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் மாண்புமிகு அமைச்சர்களைச் சந்தித்து தங்களுடைய குறைகளை நிவர்த்திக்க கூறினார்களா ? அப்படிக் கூறியிருந்தால், அவர்களுக்கு அமைச்சர் ஏதேனும் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்களா ? குறைந்த அளவுக்கு 10 சதவீதமாவது தங்களுடைய வேலை நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை அரசு அனுதாபத்தோடு கவனிக்குமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாஷா : Gang Mazdoors சார்பாக என்னைச் சந்தித்ததாக ஞாபகம். வாக்குறுதி ஒன்றும் கொடுக்கப்படவில்லை.

Narayana Thevan Kalvoi

* 227 *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have received the representations of the people of Mudukulathur to carry out the "Narayana Thevan Kalvoi" Scheme;

(*b*) if so, whether there is any proposal regarding the scheme, with the Government ; and

(*c*) the number of years for the completion of this scheme?

நாராயணத் தேவன் கால்வாய்.

திரு. வி. தங்கபாண்டியன்: மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) "நாராயணத் தேவன் கால்வாய்" என்ற திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு முதுகுளத்தூர் மக்களின் முறையீடுகள் அரசுக்கு வந்துள்ளனவா ?

(இ) ஆமெனில், அது பற்றி அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உண்டா ?

(உ) எத்தனை ஆண்டுகளில் அந்தத் திட்டம் நிறைவேறக்கூடும் ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) முதுகுளத்தூர் வட்டத்தில் நாராயணத்தேவன் கால்வாய் என்ற பெயரில் திட்டம் எதுவும் இல்லை.

(இ), (உ) இவ்வினாக்களுக்கு இடமில்லை,